# பிற்சேர்க்கை 1

# பாட வினாக்களுக்கான விடைகள்

## சர்வ வல்ல தேவன் இருக்கின்றாரா?

*(பாடம் 1 க்கான வினாக்கள் பக்கம் 15 ல் காணப்படுகின்றன)*

1. எவர் ஒருவரும் கேட்கக் கூடிய ஆழ்ந்த அறிவுள்ள கேள்வி: "தேவன் இருக்கின்றாரா?" என்பதே ஆகும்.
2. "தேவன் இருக்கின்றாரா?" என்ற கேள்வி ஆழ்ந்த அறிவுள்ளதாகும், ஏனென்றால் இக்கேள்விக்கு நாம் அளிக்கும் விடையானது, வாழ்வைப் பற்றிய நமது மற்ற கேள்விகளின் பதில்கள் யாவற்றின் மீதும் விளைவு ஏற்படுத்தக் கூடியதாய் உள்ளது.
3. தேவன் இருக்கின்றார் என்ற உறுதியான கூற்றைக் கொண்டு வேதாகமம் தொடங்குகின்றது.
4. இந்த உலகத்தின் ஆதாரமே, தேவன் இருக்கின்றார் என்று நாம் நம்பும்படி நம்மை வற்புறுத்தும் முதலாவது ஆதாரம் ஆகும். பூமியும், இந்த அண்டம் முழுவதுமே தேவன் இருக்கின்றார் என்பதை சொல் திறமையுடன் அறிவிக்கின்றன.
5. மனிதன் இருப்பது தேவனால் இல்லையென்றால், (1) வாழ்வின் தொடக்கம்; (2) இயற்கையின் விதிகள் இருப்பது மற்றும் (3) குடும்பம் இருப்பது ஆகியவற்றை நாம் விளக்கிக் கூற முடியாது.

## வேதாகமம், தேவனுடைய வார்த்தை

*(பாடம் 2 க்கான வினாக்கள் பக்கம் 31 ல் காணப்படுகின்றன)*

1. தேவ ஆவியினால் "அருளப்பட்டிருக்கிறது" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொற்றொடர், "தேவனால் சுவாசிக்கப்பட்டது" என்ற மூலப் பொருளுடையதாய் இருக்கின்றது. உலக எழுத்தாளர்கள் பலவகையான தூண்டுதல்களினால் "ஏவப்படுவதாக" க் கூறுப்படுகின்றது, ஆனால் தேவனே வேதாகமத்தின் மூலமாக இருந்து ஏவுதல் கொடுத்தார் என்பதை வேதாகமம் உறுதிப்படுத்துகின்றது.
2. வேதாகமத்தை அழிப்பதற்கு டயோக்கிளேஷியன் செய்த முயற்சியில் அவன் தோல்வியடைந்தான். உண்மையில், நூறு ஆண்டுகளுக்குப் பின்னால் வந்த இன்னொரு ரோமச் சக்கரவர்த்தி புதிய ஏற்பாட்டை மறுபடியும் உற்பத்தியாக்க விரும்பியதாக அறிவித்தபோது இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் அவனிடத்தில் ஐம்பது பிரதிகள் தரப்பட்டன.
3. சுகாதாரத்தைப் பற்றியோ அல்லது நலவாழ்வு நடைமுறைகள் பற்றியோ எதுவும் அறியாத நிலையில் இந்த உலகம் இருந்த சமயத்தில் எழுதப்பட்ட மோசேயின் புத்தகங்களில் தற்காலக் கருத்துக்கள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. விஞ்ஞானிகள் கிருமிகளைக் கண்டு பிடிப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே, லேவியராகமம் 13:45ல் நோய் பரவாமல் தடுப்பதற்கு உதவக் கூடிய அறிவுரைகள் தரப்பட்டுள்ளன.
4. இலக்கியத்தால் அறியப்பட்ட ஒவ்வொரு பாடக் கருத்தையும் வேதாகமம் உள்ளடக்கியுள்ள அதே வேளையில், நாற்பதுக்கும் மேற்பட்ட எழுத்தாளர்களால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால இடை வெளியில் எழுதப்பட்டிருந்தாலும், அது ஒரு முழுமையான ஒருமைப்பாட்டையும் விளக்கப்படுத்துகின்றது.
5. வேதாகமத்தின் மையக் கருத்து இயேசு கிறிஸ்து என்ற ஒரு மனிதரின் வரலாறு ஆகும்.
6. வேறு எந்தப் புத்தகத்தைக் காட்டிலும், வேதாகமமானது மனிதகுலத்தில் அதிக செல்வாக்குப் பெற்றதாக இருக்கின்றது. இது வரலாற்றின் ஓட்டத்தை மாற்றியிருக்கின்றது, சக்கர வர்த்திகளை ஏற்படுத்தியிருக்கின்றது, இதன் கொள்கைகளுக்குக் கீழ்ப்படிகின்றவர்களுக்கு ஆசீர்வாதங்களையும்,

வெற்றியையும் கொண்டு வந்திருக்கின்றது.

7. வேதாகமத்தை வாசிப்பவர்களுக்கு அது (வேதாகமம்) அவர்களின் நித்தியத்தைப் பற்றிய நம்பிக்கைக்கு உறுதி அளிக்கின்றது, அவர்களின் அன்புக்குரியவர்கள் இறக்கும்போது அவர்களுக்கு ஆறுதல் தருகின்றது.
8. தேவனுடைய வார்த்தையில் அதன் பழங்காலத் தன்மை, அதன் நவீனத் தன்மை, அதன் பல்வகைப்படுத்தும் தன்மை, அதன் ஒன்றாக்கும் தன்மை, அதன் மையக் கருத்து, அதன் செல்வாக்கு, அதன் ஆறுதல் என்ற ஏழு அதிசயங்கள் உள்ளடங்கியுள்ளன.

## பிதாவாகிய தேவன் யார்?

*(பாடம் 3 க்கான வினாக்கள் பக்கம் 50 ல் காணப்படுகின்றன)*

1. உண்மையான உயிருள்ள தேவனாக இருப்பவர் ஒருவரே. அவரே இந்த உலகத்தைப் படைத்தவர், அவர் ஒருவரே நித்தியமானவரும், எல்லா வல்லமையும் நிறைந்தவரும், எல்லாம் அறிந்தவரும், எங்கும் இருப்பவருமாக உள்ளார்.
2. தேவத்துவத்தைப் பற்றிய கருத்தானது பழைய ஏற்பாட்டில், ஆதி. 1:26; ஆதி. 3:22; ஆதி. 11:7; மற்றும் ஏசா. 6:8 ஆகிய வசனங்களில் காணப்படுகின்றது.
3. இயேசுவின் ஞானஸ்நானம், மனிதனின் இரட்சிப்புக்கான ஊழியம், ஜெபம் மற்றும் ஞானஸ்நானத்திற்கான பிரதான கட்டளை ஆகியவற்றில் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோர் இணைந்து செயல்படும் நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன.
4. மனிதன், இயேசு கிறிஸ்துவின் வழியாக மட்டுமே தேவனிடத்தில் வர முடியும். இவர் ஒருவரே, தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் உள்ள அதிகாரம் பெற்ற மத்தியஸ்தர் ஆவார்.
5. யோவா. 14:6 மற்றும் 1 தீமோ. 2:5 ஆகிய வசனங்கள், தூதர்கள், பரிசுத்தவான்கள் அல்லது (உயிருள்ள அல்லது இறந்து போன) மற்ற மனிதர்கள் மூலமாக தேவனை அணுக முடியாதென்று போதிக்கின்றன. இயேசு கிறிஸ்து ஒருவரே பிதாவினிடத்தில் சென்றடைய ஒரே வழியாக இருக்கின்றார்.
6. இயேசு கிறிஸ்து மனித குலத்துடன் கொண்டுள்ள உறவைப் பிரதிப்பலிப்பதற்கு "மனுஷ குமாரன்" என்றும், அவர் தேவனு

*டன் கொண்டுள்ள உறவைப் பிரதிப்பலிப்பதற்கு "தேவ குமாரன்" என்று அழைக்கப்படுகிறார்.*

7. *வேதாகமத்தில் தேவனைப் பற்றிய பின்வரும் உண்மைகள் போதிக்கப்பட்டுள்ளன: (1) பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவி ஆகியோர் இருக்கின்றனர். (2) இந்த மூவரும் மகிமையுள்ள ஒரு தேவத்துவத்தை ஏற்படுத்துகின்றனர். (3) அவர்கள் ஒன்றிணைந்து, ஒன்றாகவே இருக்கின்றனர். (4) அவர்கள் நித்தியமானவர்களாகவும், தனிச் சிறப்புள்ளவர்களாகவும், படைக்கப்பட்டவைகளிலிருந்து வித்தியாசமானவர்களாகவும் இருக்கின்றனர். (5) அவர்கள் ஒரே சித்தம் மற்றும் ஒரே நோக்கம் உள்ளவர்கள் ஆவார்கள்.*
8. *தேவன் எல்லாவற்றையும் படைத்தார் என்ற உண்மையின் மீது நிலை கொண்டிருக்கும் சத்தியங்கள்: (1) அவர் ஒருவரே எல்லா உண்மை நிலைகளுக்கும் பின்னணியில் இருக்கின்றார். (2) அவர் நித்தியமானவர். (3) அவர் எல்லாம் வல்லவர். (4) அவர் எல்லாம் அறிந்தவர். (5) அவர் எங்கும் இருக்கின்றார். (6) அவர் ஒருவரே உண்மையான, உயிருள்ள தேவன்.*
9. *கொலோ. 1:16, 17ல், தேவன் அவருக்குள் எல்லாவற்றையும் நிலை நிற்கச் செய்து இவ்வுலகில் தொடர்ந்து செயலாற்றுகிறார் என்று நமக்குக் கூறப்படுகிறது. தர்க்க வாதமும், உற்று நோக்கலும் கூட, ஒரு சர்வ வல்லமையுள்ள கரமானது இயற்கை விதிகளுடன் இப்பூமியை பராமரிப்பதை நமக்குக் கூறுகின்றன. அவர் தொடர்ந்து பூமிக்கும் அதன் மக்களுக்கும் காற்று, தண்ணீர் மற்றும் சூரிய வெளிச்சம் ஆகியவற்றைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்.*
10. *இயேசு கிறிஸ்துவின் மூலமாக வரவிருக்கும் தேவனுடைய நியாயத்தீர்ப்பானது தனிப்பட்டதாகவும், குறிப்பிட்டதாகவும், உலகளாவியதாகவும் இருக்கும்.*

## இயேசு,தேவனுடைய குமாரன்

*(பாடம் 4 க்கான வினாக்கள் பக்கம் 59 ல் காணப்படுகின்றன)*

1. *இயேசு கிறிஸ்து, தேவனுடைய குமாரன் என்ற சத்தியமே கிறிஸ்தவத்தின் இருதயம் போன்ற மையப் பகுதியில் இருக்கின்றது.*

2. இயேசுவின் பிறப்பானது அவரது வம்சா வழியினரைப் பற்றிய சில குறிப்புக்களுடன் தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டது. அவரது பிறப்பிடம் மற்றும் அவரது பிறப்பின் இயல்பு ஆகியவை முன்னுரைக்கப்பட்டன. அவர் எகிப்துக்கு எடுத்துக் கொண்டு செல்லப்படுவது பற்றியும், அவரது பிறப்பின் போது நடந்த மாபெரும் படுகொலைகள் பற்றியும் தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தார்கள். கலிலேயாவில் அவரது வாழ்க்கை பற்றியும், எருசலேமில் அவர் ஜெயத்துடன் பிரவேசித்தது பற்றியும், அவருக்கு முன்னோடியைப் பற்றியும், மற்றும் அவருடைய ஊழியம் பற்றியும் தீர்க்கதரிசனங்களில் கூறப்பட்டன. அவருடைய ஊழியம், உவமைகளிலான அவரது போதனை, புறஜாதிகள் நடுவில் அவரது ஊழியம், மற்றும் யூத அதிகாரிகளால் அவர் புறக்கணிக்கப்படுதல் ஆகிய அனைத்தும் முன்னுரைக்கப்பட்டன. இயேசு காட்டிக் கொடுக்கப்படுதல் மற்றும் அவருடைய மரணம் ஆகியவை தீர்க்கதரிசனத்தில் மாபெரும் விபரங்களுடன் சித்தரிக்கப்பட்டுள்ளன. மரிக்கும் போது அவர் கூறிய வார்த்தைகளும், அவரது அடக்கம், உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கேறுதல் ஆகியவையும் முன்னதாகவே பதிவு செய்யப்பட்டிருந்தன.
3. இயேசுவின் வாழ்க்கை பற்றிய தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமானது இயேசு தெய்வீகமானவர் என்பதையும், வேதாகமத்தை எழுதிய மனிதர்கள் ஏவுதல் பெற்றவர்கள் என்பதையும் காண்பிக்கின்றது.
4. இயேசு, தாம் ஆபிரகாம் உண்டாவதற்கு முன்பே இருந்ததாகவும், உலகம் தோன்றுவதற்கு முன்பே தாம் பிதாவினிடத்தில் இருந்ததாகவும் கூறினார்.அவர் தாம் வானத்திலிருந்து வந்ததாகவும், பூமியின்மேல் சகல அதிகாரமும் தமக்கு உண்டு என்றும் போதித்தார்.
5. இயேசு, தாம் உலகத்திற்கு வெளிச்சமாய் இருப்பதாகக் கூறினார்; பிறகு பார்வையற்ற ஒருவரை பார்வையடையும்படி செய்தார். அவர் தம்மை ஜீவ அப்பம் என்று கூறிக் கொண்டார்; ஐயாயிரம் பேருக்கு உணவு கொடுத்தார். தாமே உயிர்த்தெழுதலும் ஜீவனும் என்று அவர் கூறிக் கொண்டார்; மரித்த லாசருவை உயிரோடே எழுப்பினார்.
6. பிலாத்துவின் மனைவி, ஏரோது, சிலுவையிலறையப்பட்ட

கள்ளன் மற்றும் யூதாஸினால் கூட இயேசுவின் நற்பண்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.

7. கர்த்தருடைய நாள், கர்த்தருடைய பந்தி, ஞானஸ்நானம் மற்றும் நமது நாட்காட்டியில் தேதியைக் கணக்கிடும் முறை ஆகிய இவை யாவும் நமது உலகத்தின் மீது இன்றும் இயேசுவால் உண்டாகும் விளைவுகளுக்கு ஆதாரங்கள் ஆகும்.

## பரிசுத்த ஆவியானவர் யார்?

*(பாடம் 5 க்கான வினாக்கள் பக்கம் 70 ல் காணப்படுகின்றன)*

1. "என்ன?" என்பதல்ல மாறாக "யார்?" என்பதே கேள்வியாகும். ஏனென்றால், பரிசுத்த ஆவி என்பவர் இருக்கிறவராக, ஆளுமைத் தன்மை கொண்ட ஒரு தெய்வீக நபராக இருக்கின்றார்.
2. பரிசுத்த ஆவியானவர் கருத்துக்களை மதிப்பிடும் பண்பும், சிந்தையும், சித்தமும், அறிவும் மற்றும் உணர்வுகளும் உள்ளவராக இருப்பதால் இவர் வெறும் சக்தியாக மட்டுமல்ல ஒரு நபராகவும் இருக்கிறார் என்று காண்கிறோம்.
3. வல்லமைகளை அல்லது சக்திகளைத் தவறாக நடத்துகின்ற செயலானது, "துக்கப்படுத்துதல்," "நிந்தித்தல்" அல்லது அவித்துப் "போடுதல்" போன்ற வார்த்தைகளால் விளக்கப்படுவது வழக்கமல்ல - கவிதை அல்லது உருவக நடையில் மட்டுமே இவ்வாறு கையாளப்படும். இங்குள்ள வசனங்கள் கவிதை நடையிலோ அல்லது உருவக நடையிலோ உள்ள மொழி நடையில் இல்லை என்பது சுட்டிக் காட்டப்படுகின்றது. ஒருவர் பரிசுத்த ஆவியை "துக்கப்படுத்தவோ" அல்லது "நிந்திக்கவோ" முடியும் என்றால், பரிசுத்த ஆவி ஒரு நபராகவே இருக்க வேண்டும்.
4. நித்தியமாய் இருத்தல், எல்லாம் அறிதல், எல்லா வல்லமையும் பெற்றிருத்தல், மற்றும் எங்கும் நிறைந்திருத்தல் ஆகிய பண்புகளைப் பரிசுத்த ஆவியானவர் பிதாவோடும் குமாரனோடும் பகிர்ந்து கொள்ளுகின்றார். பிதா மற்றும் குமாரனைப் போல் ஆவியானவரும் படைக்கும் வல்லமை பெற்றிருக்கின்றார்.

## தேவன் மனிதரானார்

*(பாடம் 6 க்கான வினாக்கள் பக்கம் 81 ல் காணப்படுகின்றன)*

1. *புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்கள் - நற்செய்திப் புத்தகங்கள் - தேவன் எவ்விதம் மனிதரானார் என்பதை வெளிப் படுத்துகின்றன.*
2. *இயேசுவின் பிறப்பு அவரது தொடக்கம் அல்ல. உலகம் உண்டாவதற்கு முன்பே அவர் பிதாவின் மகிமையில் இருந்தார்.*
3. *யோவா. 1:1-5 பின்வரும் நான்கு சத்தியங்களைப் போதிக் கின்றன: (1) இயேசு படைக்கப்பட்டவரல்ல. (2) தேவன் இந்த உலகத்தை இயேசுவின் மூலமாகவே படைத்தார். (3) இயேசு உயிர் வாழ்பவர்களுக்காக ஜீவனைக் கொடுக்கிறார். (4) இயேசு வாழ்வு மற்றும் மரணத்திற்குக் கர்த்தராய் இருக்கின்றார்.*
4. *இயேசு (1) பரலோகத்தை விடுதல். (2) மனிதராகுதல் . (3) மனிதர்களுக்கு ஊழியம் செய்தல். மற்றும் (4) மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தல் ஆகிய நான்கு படிகளில் கீழே இறங்கி வந்தார்.*
5. *தேவன் மனிதரானார் என்பதே கிறிஸ்தவத்தின் மையமான சத்தியம் ஆகும்.*
6. *இயேசு ஒரு கன்னிப் பெண்ணிடம் பிறந்தார் என்பதே தனிச் சிறப்பான அம்சம் ஆகும்.*
7. *(1) இயேசு தேவனாக இருந்தார், இருக்கின்றார். (2) இயேசு ஒரு மனிதரானார். (3) இயேசு இந்த பூமியில் தேவ - மனிதராக வாழ்ந்தார் என்ற இந்த மூன்று சத்தியங்களையும் நாம் எப்போதுமே மறக்கக் கூடாது.*
8. *இயேசு தேவனாக இருந்தார்: அவர் ஒரு மனிதரானது என்பது, ஒரு மனிதன் ஒரு எறும்பாக ஆவதைக் காட்டிலும் மிகப் பெரிய தாழ்மையுள்ள செயலாகும்.*

## இயேசுவை நாம் எவ்விதம் கண்ணோக்குகின்றோம்

*(பாடம் 7 க்கான வினாக்கள் பக்கம் 97 ல் காணப்படுகின்றன)*

1. *"இரட்சகர்" என்ற வார்த்தை, மற்றவர்களை மிகவும் அபாயமான நிலையிலிருந்து காப்பாற்றும் ஒருவரைக் குறிக்கின்றது.*

2. நமது பாவங்களிலிருந்து நம்மை இரட்சிப்பதால் இயேசு ஒரு தனிச் சிறப்புள்ள இரட்சகராக இருக்கின்றார். அவர் நமது ஆவிக்குரிய இரட்சகராயிருக்கின்றார்.
3. "கிறிஸ்து" என்றால் "அபிஷேகம் பண்ணப்பட்டவர் அல்லது தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்" என்று அர்த்தமாகும்.
4. இயேசுவின் ஞானஸ்நானத்தின் பொழுது தேவன் அவரைத் தமது குமாரன் என்று அறிவித்தபடியினால், நாம், இயேசு தேவனுடைய குமாரன் என்று அறிகின்றோம். நமக்கு மூன்று சாட்சிகள் கொடுக்கப்பட்டுள்ளதாக அப்போஸ்தலனாகிய யோவான் கூறினார்: ஆவி, ஜலம் மற்றும் இரத்தம்.
5. பரிசுத்த ஆவி, ஜலம் மற்றும் இரத்தம் என்று பேசுகையில், அப்போஸ்தலரானவர், இயேசுவின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டார். அவர் தண்ணீர் ஞானஸ்நானம் பெறுகையில் ஆவியானவர் அவர் மீது இறங்கி வந்தார். இரத்தம் என்பது அவரது மரணத்தின்போது நடந்த நிகழ்ச்சிகளைக் குறிக்கின்றது.
6. இயேசுவை கர்த்தரென்றும் கிறிஸ்து என்றும் ஏற்றுக்கொள்ளும் படிக்குத் தமது உரையைக் கேட்டவர்களிடத்தில் பேதுரு அறைகூவல் விடுத்தார் (அப். 2:36).
7. இயேசு கர்த்தராக இருக்கும் பட்சத்தில் (அவர் அப்படியே இருக்கின்றார்), நாம் அவரது உபதேசத்திற்கு நம்மை ஒப்புக்கொடுத்து, நமது வாழ்க்கையில் அவருக்கே முதலிடம் தர வேண்டும்.

## இயேசு இந்த பூமிக்கு வந்தது எதற்காக?

*(பாடம் 8 க்கான வினாக்கள் பக்கம் 109 ல் காணப்படுகின்றன)*

1. கர்த்தர் இந்த பூமிக்கு வந்ததுதான் மனித வரலாற்றிலேயே மாபெரும் நிகழ்ச்சியாகும். சிலுவையில் மரணமடைவதற்காக அவர் வந்ததைப் பொறுத்தே நமது இரட்சிப்பு இருக்கின்றது.
2. இயேசு முற்றிலும் மனிதராகவும் முற்றிலும் தெய்வீக மானவராகவும் இருந்தார்.
3. இயேசு முற்றிலும் தெய்வீகமானவராகவும் முற்றிலும் மனித ராகவும் இருந்தார்.
4. நமது கர்த்தர்-தமது ஊழியம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல்

*மூலமாக-தமது சபை என்று தாம் அழைக்கும் ஒரு மக்கள் கூட்டத்தை அழைத்துக்கொள்ள வந்தார்.*

5. *இயேசு பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் பயிற்சி அளித்தார், ஆனால் அவர் சென்ற பிறகு அவர்கள் செய்ய வேண்டிய ஊழியத்திற்காகவே அவர் அவர்களுக்குப் பயிற்சியளித்தார் என்பது உறுதி (யோவா. 14:19).*
6. *கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாயிருப்பது என்பதன் மூலம் கிறிஸ்துவின் வாழ்வுக்கு நாம் பதில்செயல் செய்ய வேண்டும் என்பதை நிருபங்கள் நமக்குக் காண்பிக்கின்றன.*
7. *இல்லை, அவரது சபையாராய் இல்லாமல் நாம் இயேசுவின் வாழ்வுக்குப் பதில்செயல் செய்ய முடியாது.*
8. *இயேசுவின் சபையாராக நாம் வாழாமல், அவர் நமக்கென்று வைத்துள்ள ஊழியத்தை நம்மால் நிறைவேற்ற முடியாது.*

## சிலுவையும் சபையும்

*(பாடம் 9 க்கான வினாக்கள் பக்கம் 124 ல் காணப்படுகின்றன)*

1. *தேவனுடைய குமாரன், மனிதர்களுக்காக சிலுவையில் தமது ஜீவனைப் பலியாகத் தந்ததுதான் வேதாகம வரலாற்றின் இருதயம் போன்ற மையப்பகுதியாகும்.*
2. *பாவங்களுக்கான ஒரு தெய்வீக பலியும், அப்படிப் பலியானவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததும் கிறிஸ்தவத்தில் மட்டுமே மையக் கருத்தாக இருக்கின்றது.*
3. *சபையில்லாத கிறிஸ்தவம் இருக்க முடியாது; ஏனென்றால் உடல் இல்லாத தலை ஒன்று செயல்பட முடியாது, அதுபோலவே தலையில்லாத உடல் ஒன்றும் செயல்பட முடியாது.*
4. *சிலுவையானது, (1) சபையை உண்டாக்குகின்றது. (2) சபையை சுத்திகரிக்கின்றது. (3) சபையை வற்புறுத்துகின்றது அல்லது இயங்கச் செய்கின்றது.*
5. *கிறிஸ்துவின்மேல் உள்ள விசுவாசத்தினாலும் (ரோமர் 10:10), பாவத்திலிருந்து மனந்திரும்புவதாலும் (அப். 11:18), கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுவதினாலும் (ரோமர் 10:10), மற்றும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப்படுத்தப்படுவதினாலும் (கலா. 3:27),*

கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஒருவர் பிரவேசிக்க முடியும்.

6. பாவமன்னிப்பு மற்றும் ஜீவன் ஆகியவைகளைப் பெற்றுக் கொள்ளும்படியாக இயேசு நம்மை அழைக்கின்றார்.
7. இயேசுவின் சரீரமே சபையாக இருக்கின்றது.

## "சபை" என்றால் என்ன?

*(பாடம் 10 க்கான வினாக்கள் பக்கம் 136 ல் காணப்படுகின்றன)*

1. பரிசுத்த ஆவியானவரால் வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டுள்ளது பற்றிப் புரிந்துகொள்ளுதல் முடிவெடுக்க உதவுவதாக உள்ளது. வார்த்தையுடைய அர்த்தங்கள், விளக்கங்கள் மற்றும் எண்ண உருவாக்கங்கள் ஆகியவை இயேசு மற்றும் அப்போஸ்தலர்களால் பயன்படுத்தப்பட்ட விதம் பற்றிப் புரிந்துகொள்ள நாம் வேதாகம உலகத்தைக் கற்றுக் கொள்ள விருப்பமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் (பிற்சேர்க்கை 3ஐப் பார்க்கவும்).
2. "சபை" என்ற வார்த்தையானது, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட மக்களின் அமைப்பைக் குறிக்கின்றது. "சபை" என்ற இந்த சரீரமானது ஓரிடத்தில் கூடிவரும் உள்ளூர் கிறிஸ்தவக் குழுவாக இருக்கின்றது. மேலும், உலக முழுவதிலும் இரட்சிக்கப்பட்டவர் களையும் இந்த வார்த்தையானது குறிப்பிட முடியும்.
3. சபை என்பது தேவனுடைய ஆலயமாகும் என்ற உண்மை யானது,தேவன் தமது மக்களிடத்தில் வாசம் பண்ணுகின்றார் என்று அர்த்தப்படுத்துகின்றது. இந்தக் காரணத்தினால்தான், தேவன் வாசம் பண்ணுகின்ற மக்களாக நாம் வாழ்ந்து, ஊழியம் செய்து அவரை ஆராதிக்க வேண்டும் எனப்படுகின்றது.
4. கிறிஸ்தவர்கள், "சபை" என்ற உயிருள்ள கட்டிடமாக அமைகின்றார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவரும் நிலையான வளர்ச்சி பெறுபவராய் இருக்க வேண்டும்.
5. கணவன், மனைவிக்குத் தலையாய் இருப்பது போலவே, கிறிஸ்துவும் சபைக்குத் தலையாயிருக்கின்றார். கணவன், மனைவியில் அன்பு கூருவது போலவே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூருகின்றார்.
6. விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும்

ஞானஸ்நானம் ஆகியவற்றின் மூலம் கிறிஸ்துவின் சபைக்குள் ஒருவர் பிரவேசிக்கின்றார். இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு நபரையும் தேவன் தமது சபையில் சேர்த்துக் கொள்கின்றார்; மனிதர் இதைச் செய்வதில்லை.

7. சபையானது கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொள்கின்றது, அவரது ஆராதனைக்காக ஒன்று கூடுகின்றது, மற்றும் உலகத்தில் அவரது ஊழியத்தைச் செய்கின்றது. கிறிஸ்துவின் பரிசுத்த ஆவி யானவர் கிறிஸ்தவர்களில் வாசம் பண்ணுகின்றார்.

## கூறப்பட்டவைகளிலேயே மாபெரும் வரலாறுக்கு அடுத்தது

*(பாடம் 11 க்கான வினாக்கள் பக்கம் 162 ல் காணப்படுகின்றன)*

1. சபையானது, பிரதான கட்டளையின் (மத். 28:20) நிறைவேற்றமாகவும், பூமியில் கிறிஸ்துவின் சரீரமாகவும் இருக்கின்றது.
2. அப். 2:1ல் "அவர்கள்" என்றுள்ள பிரதிப் பெயர்ச் சொல்லானது அப். 1:26ல் இருந்த "பதினோரு அப்போஸ்தலர்களை" யே குறிக்கின்றது. பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்களைத் தவிர வேறு எவரும் பரிசுத்த ஆவி யானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டதாக வேதாகமத்தில் எந்தப் பகுதியிலும் குறிப்பிடப்படவில்லை.
3. தேவனுடைய செய்தியை வெளிப்படுத்தவும், அந்தச் செய்தி தேவனிடத்திலிருந்தே வந்தது என்பதை உறுதிப்படுத்தவும், மற்ற கிறிஸ்தவர்களுக்கு அற்புத வரங்களைக் கொடுக்கவும் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானப்படுத்தப்பட்டனர்.
4. அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ் நானத்தைப் பெற்ற நிகழ்ச்சியானது, ஏவப்பட்ட மனிதர்களாலேயே புதிய ஏற்பாடு நமக்குக் கொடுக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றது.
5. கிறிஸ்துவின் தெய்வீகத்திற்கு ஆதாரமாக அவரது அற்புதங்கள், அவரது உயிர்த்தெழுதல், தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம், சாட்சியங்களின் ஆதாரம் மற்றும் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்தது ஆகியவற்றைப் பற்றி பேதுரு பேசினார்.

6. தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்கு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இன்றியமையாததாக உள்ளது. கிறிஸ்து உயிர்த் தெழாதிருந்தால் அவர் தேவனுடைய தெய்வீகமான குமாரன் என்று எண்ணப்பட்டிருக்க முடியாது.
7. பாவத்தில் இழந்துபோன நிலையில் இருப்பதைக் காட்டிலும் மாபெரும் துன்பம் வேறெதுவும் இல்லை.
8. இரட்சிப்பின் நிபந்தனைகளைப் பொறுத்தமட்டில், மாற். 16:15, 16 விசுவாசத்தை வலியுறுத்துகின்றது; லூக். 24:46, 47 மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் மற்றும் மத். 28:18-20 ஞானஸ்நானத்தையும் வலியுறுத்துகின்றன.
9. அப். 22:16 வசனப்பகுதியானது அப். 2:38 வசனப் பகுதியுடன் தொடர்புடைய வகையில், பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள ஞானஸ்நானம் அவசியம் என்று நிரூபிக்கின்றது.

## புதிய ஏற்பாட்டின் சபை

*(பாடம் 12 க்கான வினாக்கள் பக்கம் 178 ல் காணப்படுகின்றன)*

1. “அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித் திருந்தார்கள்” என்பது ஏவப்பட்ட அப்போஸ்தலர்கள் போதித்திருந்ததை உண்மையாய்ப் பின்பற்றியதை அர்த்தப்படுத்துகின்றது. கிறிஸ்தவர்கள் தேவனுடைய வசனத்திற்கு இதே போன்ற உறுதியான ஈடுபாட்டைக் கொண்டிருக்க வேண்டும்.
2. எருசலேமில் இருந்த சபையார் சிந்தை, இருதயம் மற்றும் உபதேசம் (போதனை) ஆகியவற்றில் ஒருமைப்பாட்டைப் பகிர்ந்து கொண்டனர்.
3. இன்றைய நாட்களில் சபையானது பரிவிரக்கம் என்ற அடையாளத்தினால், தேவனுடைய வசனத்திற்குக் கீழ்ப்படித லுடன் இருக்க வேண்டும். சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் ஒவ்வொரு நபரும் கிறிஸ்துவோடும், சபையின் மற்ற எல்லா உறுப்பினர்களோடும் ஒன்றாக்கப்படுகின்றார். கிறிஸ்தவர்கள் ஒரே இருதயமும் ஒரே வாழ்க்கையும் உள்ள ஒரு குடும்பமாக இருக்கின்றார்கள்.
4. புதிய ஏற்பாட்டின் சபை எது என்பதைப் பற்றிய நமது

முடிவானது தேவனுக்கான நமது அன்றாட வாழ்க்கை, நமது ஆவிக்குரிய அடையாளம், நமது ஆராதனை மற்றும் நமது ஆவிக்குரிய ஊழியம் ஆகியவற்றில் செல்வாக்கைச் செலுத்துகின்றது.

5. அப். 2:41-47; 5:11; 7:38 மற்றும் 8:1, 3 ஆகியவை புதிய ஏற்பாட்டின் சபையானது பெந்தெகொஸ்தே நாளில் தொடங்கியதைக் காட்டுகின்றன.
6. கத்தோலிக்க சபையானது கி.பி. ஏழாம் நூற்றாண்டில் அப்போஸ்தலருடைய உபதேசத்திலிருந்து வழி விலகிச் சென்றவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. மற்ற நாமகரணக் கூட்டங்கள் பதினாறாம் நூற்றாண்டில் திடீரெனத் தோன்ற ஆரம்பித்தன.
7. கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சரீரத்தில் அமையப் பெறுகின்றார்கள்.
8. புதிய ஏற்பாட்டில் காணப்படாத பெயர் எதுவும் ஒரு குழுவைப் புதிய ஏற்பாட்டின் சபையாக அடையாளப் படுத்துவதில்லை.
9. ஆம், இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள், தேவனுடைய கட்டளையின்படி நிலைநாட்டப்பெற்ற புதிய ஏற்பாட்டின் சபையினுடைய அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

## தேவனுடைய மக்களுக்கு விசேஷ வார்த்தைகள்

*(பாடம் 13 க்கான வினாக்கள் பக்கம் 195 ல் காணப்படுகின்றன)*

1. தேவன் இஸ்ரவேலர்களின் அரசராக இருந்து, அவர்களின் அரசாங்கம் மற்றும் அவர்களின் மார்க்கம் ஆகியவற்றுக்குத் தலைவராக இருந்தார். இஸ்ரவேல் ஒரு தேவ அரசாக (தேவனால் ஆளப்பட்ட தேசமாக) இருந்தது.
2. சவுல் அரசர், யேகோவாவின் ஊழியராக இருக்க வேண்டியிருந்தது. அவருடைய அதிகாரமானது மோசேயின் பிரமாணத்தினால் வரையறை செய்யப்பட்டிருந்தது.
3. தானியேல் தீர்க்கதரிசனத்தின்படி, வரப்போகிறதாயிருந்த அரசு விசேஷித்ததாகும். அது மற்ற எல்லா அரசுகளின் இயல்புகளைக் காட்டிலும் மேலான இயல்பு கொண்ட நித்திய அரசாகும்.
4. பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதல் மூலமாக, “இராஜ்யம்”

*என்ற வார்த்தைக்குப் பதிலாக படிப்படியாக "சபை" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. மக்களின் இருதயங்களில் கிறிஸ்துவின் அரச ஆளுகையானது சபையை எவ்விதம் உருவாக்கியது என்பதை இந்த வார்த்தை காண்பிக்கின்றது.*

5. *பவுல் தேவனுடைய ராஜ்யத்தில் இருந்தார், ஆனாலும் அவர் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பதை எதிர்நோக்கியிருந்தார். விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் இப்பொழுது கிறிஸ்துவின் ஆவிக்குரிய ஆளுகையின் கீழ் இருக்கின்றார்கள், ஆனால் தேவன், கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோருடன் நித்தியத்தில் முழுமையான மற்றும் நெருங்கிய உறவில் பிரவேசிப்பார்கள்.*
6. *"சபை" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் 114 முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் இந்த முக்கியமான வார்த்தையின் பயன்பாட்டைப் புரிந்து கொள்ளாமல் நாம் கிறிஸ்துவினுடைய இரட்சிப்பின் வழியைப் புரிந்து கொள்ள முடியாது (பிற்சேர்க்கை 3ஐக் காணவும்).*
7. *அப். 19:25ல் உள்ளது போல, "சபை" (கூடிவரச் செய்து) என்ற வார்த்தையானது பொதுவாக ஒரு கூட்டத்தைக் குறிப்பதாக இருக்கின்றது.*
8. *புதிய ஏற்பாட்டில் "சபை" என்ற வார்த்தை வருகின்ற எல்லா இடங்களிலுமே அது மார்க்க ரீதியான அல்லது "வெளியே அழைக்கப்பட்ட" கூட்டத்தைக் குறிப்பதாக இல்லை (சில இடங்களில் இது சாதாரண கூட்டத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது).*

## சபைக்கான தெய்வீகப் பெயர்கள்

*(பாடம் 14 க்கான வினாக்கள் பக்கம் 210 ல் காணப்படுகின்றன)*

1. *இயேசு அரசராக (தலையாக) இருக்கின்றார், சபையின் உறுப்பினர்கள் அவருடைய ஆவிக்குரிய இராஜ்யத்தின் குடிமக்களாய் இருக்கின்றார்கள்.*
2. *கிறிஸ்து, சபையைத் தோற்றுவித்து, அதைக் கிரயம் கொண்டு, அதை உரிமையாக்கி, அதன் தலையாக விளங்குகின்றார். சபையானது "தேவனுடைய சபை" என்றும் கண்ணோக்கப்படலாம்.*

3. தேவனால் சபைக்கென்று குறிப்பிட்ட பெயர்கள் கொடுக்கப் பட்டுள்ளன, அவைகள் தெய்வீக நோக்கமொன்றை நிறைவேற்றுவதால், நாம் அவற்றையே பயன்படுத்த வேண்டும்.
4. வேதாகமத்தின்படியாகவே நாம் சபையைக் குறிப்பிடும்போது, தேவன் விரும்பியபடி ஆகக்கூடிய சரியான பாதையில் நம்மை நாம் நிலைநிறுத்திக் கொள்ளுகின்றோம்.
5. கிறிஸ்தவர்கள் தேவனுடைய குடும்பத்தாராய் இருக்கின் றார்கள். அவர்களின் மனமாற்றத்தின் போது, தேவன் அவர்களைத் தமது பிள்ளைகளாகச் சுவீகரித்துக் கொள்ளுகின்றார்; கிறிஸ்துவுடன் அவர்கள் நித்திய ராஜ்யத்தின் சுதந்திரராகும் குடும்ப உரிமைப் பேற்றை அவர்களுக்குக் கொடுக்கின்றார்.
6. இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் எப்படி வாழ வேண்டும் என்று போதித்தபடி வாழ முயற்சி செய்து, கிறிஸ்துவைப் பின்பற்றுபவர் “கிறிஸ்தவர்” என்னப்படுகின்றார்.
7. “கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்” என்று பவுல் கூறினார்.
8. மனமாற்றத்தில் ஒருவர் தேவனுடைய பிள்ளையாக சுவீகரிக்கப்படுகின்றார். அவர் அல்லது அவள் ஒரு நித்திய சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ளுவதோடு,தேவனுடைய பூமிக்குரிய குடும்பத்தின் பெலத்தையும் ஆதரவையும் பெற்றுக் கொள்ள முடிகின்றது. தேவன் பிதாவாக இருக்கின்றார், இயேசு மூத்த சகோதரராக இருக்கின்றார், எல்லாக் கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகளாய் இருக்கின்றார்கள்.
9. புதிய ஏற்பாட்டில் “சீஷன்” என்ற வார்த்தை 238 முறைகள் வருகின்றது.
10. சீஷன் என்பவர் தம்மைக் காட்டிலும் பெரியவருக்குத் தம்மை ஒப்புக் கொடுத்து, பெரியவரிடமிருந்து தொடர்ந்து கற்றுக் கொள்பவராயிருக்கின்றார். அவர் கேட்பவராக, கற்பவராக, தொடர்ந்து கற்றுக் கொள்பவராக இருக்கின்றார்.
11. “பரிசுத்தவான்கள்” தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட வர்கள். ஒருவர் கிறிஸ்தவராகும்போது, “பரிசுத்தவானாக”, தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவராக ஆகின்றார். பரிசுத்தவான் என்பவர் பரிசுத்த அழைப்பினால் அழைக்கப்பட்டு, பரிசுத்த நடக்கையுடன் வாழ்ந்து, கடைசி

*நாளில் தேவனுக்கு முன்பாக “பரிசுத்தராகவும், குற்றமற்றவராகவும், கண்டிக்கப்படாதவராயும்” இருப்பதற்கு நாடுகின்றார் (கொலோ. 1:21ஐக் காணவும்).*

## கிறிஸ்து, சபையின் தலைவர்

*(பாடம் 15 க்கான வினாக்கள் பக்கம் 220 ல் காணப்படுகின்றன)*

1. *முன்னால் நின்று வழிநடத்தாத எந்தத் தலைமைத்துவமும் உண்மையான தலைமைத்துவம் அல்ல.*
2. *இயேசு தமது பிரமாணத்தினால் சபையை வழிநடத்துகின்றார். (எபே. 1:20, 23; கொலோ. 1:18, 19ஐக் காணவும்).*
3. *காலங்களின் முடிவு வரையிலும் கிறிஸ்து சபையின் தலைவராக இருந்து ஆளுகை செய்வார்.*
4. *பரிபூரணமான வாழ்க்கையினாலும், பிதாவாகிய தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்கும் தன்மையினாலும் இயேசு நமது பரிபூரணமான இரட்சகரானார்.*
5. *நாம் எதை நோக்குகின்றோமோ அதாகவே நாம் ஆகின்றோம். கிறிஸ்தவர்கள் எப்படி வாழ வேண்டும் என்பதற்குக் கிறிஸ்துவின் வாழ்வையே முன் மாதிரியாக நோக்குகின்றார்கள். அவர் தமது பரிபூரணமான வாழ்க்கையினால் அவர்களை என்றென்றும் வழி நடத்துகின்றார்.*
6. *தாழ்மை மற்றும் ஊழியத்தில் கிறிஸ்துவின் எடுத்துக்காட்டை நாம் பின்பற்ற வேண்டும்.*
7. *எந்த வகையில் எல்லாம் தேவையாய் இருக்கிறதோ, அந்த வழியில் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்து கொள்வதினால் கிறிஸ்தவர்கள் “ஒருவர் பாதங்களை ஒருவர் கழுவுகின்றார்கள்.”*

## சபையில் பிரவேசித்தல்

*(பாடம் 16 க்கான வினாக்கள் பக்கம் 230 ல் காணப்படுகின்றன)*

1. *கர்த்தருடைய சபையின் விலையற்ற மதிப்பானது, அதன் தெய்வீகத் தொடக்கம், அதன் மதிப்புயர்ந்த விலைக் கிரயம், மற்றும் அதன் மீது வைக்கப்பட்டுள்ள மாபெரும் மதிப்பீடு ஆகியவற்றால் காண்பிக்கப்படுகின்றது.*
2. *ஆம், பிரதான கட்டளையின் நிபந்தனைகள் இன்றும் நம்மைக்*

*கட்டுப்படுத்துகின்றன. உலகத்தின் முடிவு வரையிலும் இவை அமுலில் இருக்கும் (மத். 28:18-20).*

3. *சிலுவையிலிருந்த கள்ளனைப்போல நாம் இரட்சிக்கப்பட முடியாது, ஏனென்றால் அந்தக் கள்ளன் பழைய பிரமாணத்தின் கீழ் மரித்தான். கிறிஸ்து நமக்காக மரித்திருப்பதால், நாம் இப்பொழுது அவருடைய பிரதான கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும்.*
4. *இன்றைய நாட்களில் ஒருவர் கிறிஸ்துவின் சபை உறுப்பினராக வேண்டுமென்றால், அவர் விசுவாசித்து, மனந்திரும்பி, கிறிஸ்துவை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற வேண்டும் (அப். 2:38, 47).*
5. *இரட்சிக்கப்பட்டவர்களைக் கர்த்தருடைய சபையில் மனிதர்கள் சேர்ப்பதில்லை; தேவன் மட்டுமே அதைச் செய்கின்றார்.*
6. *கிறிஸ்தவராவதற்கு நடபடிகள் புத்தகத்தில் செய்யப் பட்டவைகளை இன்று ஒருவர் செய்யும்போது, நடபடிகள் புத்தகத்தில் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந் தவர்களுக்குச் செய்ததை தேவன் இவருக்கும் செய்வார்.*
7. *அப். 2ல் மக்கள் செய்த விதமாகவே சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதினால் ஒருவர், தாம் கிறிஸ்துவின் சபையில் இருப்பதை உறுதி செய்து கொள்ள முடியும். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிச்சயமானவைகளாதலால், அவர் இதை நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும்.*
8. *ஆம், இரட்சிப்புக்கான கர்த்தருடைய நிபந்தனைகள் களங்கப்படுத்தப்படும்போது, பெரும் சேதம் செய்யப் படுகின்றது. அந்த நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிதல் மற்றும் கர்த்தருடைய திட்டத்தில் அவைகளின் முக்கியத்துவத்தைக் காணுதல் ஆகியவற்றைச் செய்யாமல் ஒருவரும் இயேசுவின் கட்டளையை வினயமாய்க் கைக்கொள்ள முடியாது.*

## சபையின் ஒருமைப்பாடு

*(பாடம் 17 க்கான வினாக்கள் பக்கம் 244 ல் காணப்படுகின்றன)*

1. *ஒருமைப்பாடானது கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தை மேம்படுத்துவதால் அது இனிமையானது. கிறிஸ்து ஒருமைப்*

பாட்டிற்காக ஜெபித்ததால் அது நல்லது.

2. கிறிஸ்து தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு, விசுவாசிகளின் ஒருமைப்பாட்டிற்காக ஜெபித்தார்.
3. ஒருமைப்பாட்டுடன் இருக்க வேண்டும் என்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே பவுல் வேண்டுகோள் விடுத்தார்.
4. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவோடும், ஒருவர் ஒருவரோடும் குடும்ப உறுப்பினர்கள் போல ஒன்றாயிருக்கின்றார்கள்.
5. கிறிஸ்துவுக்குள் ஒருவர் ஞானஸ்நானம் பெறும்போது, அவர்/அவள் மற்ற கிறிஸ்தவர்களுடன் ஒன்றாகின்றார்/ள்.
6. போதனையிலும் விசுவாசத்திலும் சபை ஒருமையுடைய தாகின்றது. கிறிஸ்துவின் சரீரத்தில் பிரவேசிக்கும் ஒவ்வொரு வருக்கும் பரிசுத்த ஆவியானவரால் ஒருமைப்பாடு கொடுக்கப் படுகின்றது, ஆனால் வேதவசனங்களின் போதனைகளுக்குக் கீழ்ப்படிவதினாலேயே ஒவ்வொரு கிறிஸ்தவரும் அந்த ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ள முடியும்.
7. கிறிஸ்துவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தலே ஒருமைப் பாட்டை உண்டாக்குகின்றது.
8. ஒவ்வொரு கிறிஸ்தவரும் வேதாகமத்தின் போதனைக்குத் தம்மை ஒப்புக் கொடுக்கும்போதுதான் போதனையில் ஒருமைப்பாடு வருகின்றது, அன்றாட வாழ்க்கையில் ஒருமைப்பாடு என்பது ஒருவர் மீது ஒருவர் அக்கறை கொள்ளுகிறதினால் வருகின்றது. சபைக்கு இவ்விரண்டுமே தேவைப்படுகின்றன.
9. ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்வதற்கு, கிறிஸ்தவர்கள் தங்கள் சகோதர சகோதரிகளின்மேல் அன்புடனும் கிருபையுடனும் கவனிப்பு மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொருவருமே தங்கள் சொந்தக் கருத்து மற்றும் விருப்பங்களை மதிப்பிடாமல், சுயநலத்திற்காக எதையும் செய்யாமல் இருக்க வேண்டும்.

## நித்திய வெகுமதியும் நித்திய தண்டனையும்

*(பாடம் 18 க்கான வினாக்கள் பக்கம் 262 ல் காணப்படுகின்றன)*

1. தேவன் அன்புள்ளவராய், இரக்கமுள்ளவராய், சகிப்புத்

தன்மையுள்ளவராய் இருக்கும் அதே வேளையில், கோபமுள்ள வராகவும், பழிவாங்குபவராகவும் இருக்கின்றார். தேவன் இருவகைப்பட்டவராகவும், கண்டிப்புள்ளவராகவும் இருக்கின்றார்.

2. துன்மார்க்கர் முடிவின்றி, நித்திய காலத்திற்கும் தண்டிக்கப் படுவார்கள். வெளி. 14:11ல் அவர்களின் வாதையானது "சதா காலங்களிலும்" இருக்கும் என்று கூறப்படுகின்றது.
3. நரகத்திற்கு அனுப்படுகின்றவர்கள் தேவனை விட்டுப் பிரிக்கப்பட்டு, பிசாசு மற்றும் அவன் தூதர்களுடன், அக்கினி மற்றும் கந்தகத்தினால் வாதிக்கப்பட்டு, புறம்பான இருளில் தேவனுடைய பழிவாங்குதலினால் உபத்திரவப்படுவார்கள்.
4. கடினமும், மனந்திரும்பாத இருதயங்களும் உள்ளவர்களாகி, தேவனை அறியாமல், சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் இருக்கின்ற மக்கள் என்று தண்டிக்கப்படுவர்களைப் பற்றி பவுல் விவரித்தார்.
5. பரலோகத்தை அடைந்து, நரகத்தின் பயங்கரங்களுக்குத் தப்பிப்பதே நமது மாபெரும் நோக்கமாக இருக்க வேண்டும்.
6. பழைய பிரமாணத்தின் கீழ் இருந்தவர்களுக்கு நீண்ட ஆயுள் மற்றும் வளமான செல்வத்துடன் கானான் நாடு வாக்களிக்கப்பட்டது. கிறிஸ்தவர்களுக்கோ பரலோகத்தில் என்றென்றுமான ஒரு இடம் வாக்களிக்கப்பட்டிருக்கின்றது.
7. "பரலோகம்" என்ற வார்த்தை மூன்று மாறுபட்ட பகுதிகளைக் குறிப்பிடுகின்றது: (1) மேகங்கள் உள்ள மற்றும் பறவைகள் பறக்கின்ற வானம்; (2) நட்சத்திரங்கள் மற்றும் வான் பொருட்கள் நிறைந்துள்ள ஆகாயம்; மற்றும் (3) தேவன் வாசம் பண்ணும் இடம்.
8. தேவன் நமது வெளிச்சமாக இருப்பதால், சூரியன், சந்திரன் அல்லது ஒரு விளக்கு ஆகியவை நமக்கிருக்காது. ஜீவவிருட்சத்தை நாம் பெறுவதால், சரீரப் பிரகாரமான உணவு நமக்குத் தேவைப்படாது.
9. தேவனுடைய சித்தத்தின்படி செய்கின்றவர்களே பரலோகத் திற்குச் செல்வார்கள்.

## மனந்திரும்புதல்

## பாட வினாக்களுக்கான பதில்கள்

*(பாடம் 19 க்கான வினாக்கள் பக்கம் 277 ல் காணப்படுகின்றன)*

1. *ஐசுவரியவானின் மரணத்திற்குப் பின்பு, அவனது முன்னு ரிமைகள் மாறின. அவன் தனது ஆத்துமாவின் நிலைபற்றியும், தனது சகோதரர்களின் ஆவிக்குரிய நிலை பற்றியும் கவலைப்படத் தொடங்கினான்.*
2. *"மனந்திரும்புதல்" என்பது மூலைக்கல் போன்ற வார்த்தையாகும், ஏனென்றால் மனந்திரும்பியவர்கள் மட்டுமே கிறிஸ்தவர்களாக முடியும். உண்மையில், நித்திய ஜீவனுக்கான கதவானது உண்மையாக மனந்திரும்பியவர்களுக்கே திறக்கப்பட்டதாய் இருக்கின்றது.*
3. *யூதாஸின் மனஸ்தாபமானது (மத். 27:3), மனந்திரும்புதல் என்பது மனஸ்தாபத்தைவிட மேலானது என்பதை விளக்கப் படுத்துகின்றது. யூதாஸ், தான் இயேசுவைக் காட்டிக் கொடுத்ததற்காக மனஸ்தாபப்பட்டான், ஆனால் அவன் மனந்திரும்பவில்லை.*
4. *தேவனுக்கேற்ற துக்கமானது மனந்திரும்புதலுக்கு முந்தியதாகவும், மனந்திரும்புதலை உண்டாக்குகிறதாகவும் இருக்கின்றது. தேவனுக்கேற்ற துக்கமானது மனந்திரும்புதலின் செயல்முறைப் பாகங்களில் ஒன்றாக இருக்கின்றது, என்றாலும் அதுவே மனந்திரும்புதலாகி விடாது.*
5. *சவுல் தனது சித்தத்தில், தீர்மானமானமாற்றத்தை மேற் கொண்டது அவரது மனந்திரும்புதலைத் தெளிவாகக் காட்டியது. அவர் கிறிஸ்துவின் சபையாரைத் துன்பப் படுத்துவதை நிறுத்தி விட்டு, தமது வாழ்க்கை முழுவதையும் இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்தார்.*
6. *தெசலோனிக்கேயர்கள், "ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்காக விக்கிரகங்களை விட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்பினதற்காக" (1 தெச. 1:9) பவுல் அவர்களைப் பாராட்டினார். அவர்கள் பாவத்திலிருந்து திரும்பினதில்மட்டுமல்ல, தேவனிடத்திற்கும் திரும்பித் தங்கள் மனந்திரும்புதலை விளக்கப்படுத்தினார்கள்.*
7. *மனந்திரும்புதல் என்பது பாவத்தை அறிக்கையிடுவதைக்*

காட்டிலும் மேலானதாக, பாவத்திலிருந்து திரும்பி, கிறிஸ்துவி னிடத்தில் திரும்புவதாக இருக்க வேண்டும். சிலர், தங்கள் பாவங்களை வேறொரு நபரிடம் அறிக்கையிடுவதே மனந்திரும்புதல் என்று எண்ணுகின்றார்கள். நமது பாவங்களை ஒப்புக் கொள்வது முக்கியமானதேயாகும் (யாக். 5:16), ஆனால் பாவப் பழக்கங்களைக் கைவிடுவது அதைவிட முக்கியமானதாகும்.

8. தேவனுடைய நற்தன்மை, வெகுமதியின் வாக்குத்தத்தம், தண்டனையின் பயங்கரம் ஆகியவையே மனந்திரும்புதலுக் கான வசனரீதியான மூன்று ஊக்குவிப்புகள் ஆகும்.

## இயேசுவைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?

*(பாடம் 20 க்கான வினாக்கள் பக்கம் 301 ல் காணப்படுகின்றன)*

1. பரலோகத்தின் ஒரே வழியாக இயேசு இருப்பதால், நாம் அவருக்கு அளிக்கும் பதில்தான், நித்தியத்தை நாம் எங்கு கழிப்போம் என்பதைத் தீர்மானம் செய்கிறது.
2. பாவம் என்னதென்று புரியாத நிலையில் இருப்பதால் பிறந்த குழந்தைகள் மற்றும் சிறு பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டியது தேவையில்லை.
3. பாவங்களுக்கு மன்னிப்புப்பெறுவதற்கு அல்லது பாவத் திலிருந்து மீட்கப்படுவதற்கு ஞானஸ்நானம் தேவை.
4. புதிய ஏற்பாட்டின் சபையை அடையாளம் காணப் பின்வரும் வினாக்களைக் கேளுங்கள்: "அவர்கள் புதிய ஏற்பாட்டின் சபையாராக மட்டுமே இருக்க முயற்சி செய்கின்றார்களா?"; "ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்கின்றார்களா?"; "இசைக் கருவிகளின் துணையின்றி அவர்கள் பாடுகின்றார்களா?"; "இயேசுவின் நாமத்தில் அவர்கள் ஜெபிக்கிறார்களா?"; "ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் அவர்கள் தங்கள் வருமானத்திலிருந்து காணிக்கை கொடுக்கின்றார்களா?"; "அவர்களின் அமைப்பு முறை எவ்விதம் உள்ளது?"; "அவர்களுக்கு இப்பூமிக்குரிய தலைமையிடம் எதுவும் உள்ளதா?"; "அவர்களின் ஊழியம் என்ன?"
5. ரோமர் 6:4 ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் அடக்கம் செய்யப்படுதல் என்று போதிக்கிறது.

6. கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவராய் இருக்கிறார் என்பதே, கிறிஸ்தவரின் வாழ்வைப் பற்றிச் சுருக்கமாகக் கூறும் சிறந்த வழியாகும்.
7. கிறிஸ்து, தேவனுக்கு விசுவாசத்துடன் கீழ்ப்படிந்தது போலவே கிறிஸ்தவரும் இருப்பதற்காகவே, ஒரு கிறிஸ்தவர் தேவனுடைய வார்த்தையுடன் நெருங்கியிருக்கிறார்.
8. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை அல்லது கர்த்தருடைய நாளிலும் கிறிஸ்தவர்கள் ஆராதனைக்கு ஒன்றுகூடும்போது, பாடல்கள், ஜெபம்,தேவனுடைய வசனத்தைக் கற்றுக் கொள்ளுதல், கர்த்தருடைய பந்தியில் பங்கேற்றல், தங்கள் பணத்தைக் காணிக்கை கொடுத்தல் ஆகிய செயல்களில் ஈடுபடுகின்றனர்.
9. இயேசு, கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்தியபோது, புளிப்பில்லாத அப்பம் மற்றும் திராட்ச இரசம் ஆகிய இரண்டு பொருட்களைப் பயன்படுத்தினார்.
10. ஒரு கிறிஸ்தவராகி, கிறிஸ்தவராக வாழ வேண்டுமென்றால் நீங்கள் (1) கிறிஸ்துவினிடத்தில் வருதல், (2) அவருக்காக வாழத் தொடங்குதல், (3) மற்ற கிறிஸ்தவர்களுடன் தவறாமல் ஆராதித்தல், மற்றும் (4) மற்றவர்களுக்கு பணி செய்யத் தொடங்குதல் என்ற நான்கு படிகளை மேற்கொள்ள வேண்டும்.